# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:109** **தேதி:-20.06.2016**

## NLCயில் CITU பிரமாண்டமான வெற்றி மற்றும் சில செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

தமிழகத்தில் உள்ள கேந்திரமான பொதுத்துறை நிறுவனம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம். நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை இங்கு தொழிற்சங்க அங்கீகார தேர்தல் நடைபெறும். இந்த ஆண்டு 17.06.2016 அன்று நடைபெற்ற தேர்தலில் முதன்முறையாக CITU சங்கம் முதன்மை அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக வெற்றி பெற்றுள்ளது. இது வரை அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களாக இருந்தவர்கள் தேர்தலில் வாக்குகளுக்கு பணம் கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றிருந்தாலும், அதனையும் மீறி NLC ஊழியர்கள் தங்களின் அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக CITU சங்கமே இருக்க வேண்டும் என வெற்றி பெற செய்துள்ளனர். போட்டியிட்ட ஆறு சங்கங்கள் பெற்ற வாக்குகள் விவரம்:-

| | | |
|---|---|---|
| **CITU** | **-** | **4,828** |
| **LPF** | **-** | **2,426** |
| **ATP** | **-** | **2,035** |
| **PTU** | **-** | **1,291** |
| **BMS** | **-** | **87** |
| **AITUC** | **-** | **12** |

மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கைகள் பொதுத்துறை நிறுவனங்களை சீரழிக்க துடிக்கும் இந்த சமயத்தில் இந்திய தொழிலாளி வர்க்கத்தின் ஈட்டி முனையாக செயல்படும் CITU சங்கம் இது போன்ற கேந்திரமான பொதுத்துறை நிறுவனத்தில் வெற்றி பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது. பொதுத்துறைகளை பாதுகாக்கும் போராட்டத்திற்கு மிகுந்த ஊக்கம் தரும் வெற்றியாகும். இந்த வெற்றிக்காக உழைத்திட்ட அனைத்து தலைவர்களுக்கும், மற்றும் வெற்றி பெற்றுள்ள NLC CITU விற்கும் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

**ஊதிய மாற்றம் தொடர்பாக CMD BSNL இன்று….:-** BSNL நிறுவனம் நஷ்டத்தில் இருந்தது என்றால் BSNL ஊழியர்களுக்கு 01.01.2017 முதல் ஊதிய மாற்றம் நடைபெறாது என்று இரண்டு மாதங்களுக்கு முன்பு பெங்களூருவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் CMD BSNL தெரிவித்திருந்தார். ஆனால் DPE வழிகாட்டுதல் அடிப்படையில் BSNL நிறுவனம் நஷ்டத்தில் இயங்கினாலும், அதன் ஊழியர்களுக்கு 01.01.2017 முதல் நடைபெற வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் CMD BSNLஇடம் சுட்டிக்காட்டியிருந்தது.

17.06.2016 அன்று மைசூருவில் நடைபெற்ற AIBSNLEA சங்கத்தின் அகில இந்திய மாநாட்டில் தனது உரையில் BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு

அவர்கள் ஊதிய மாற்ற பிரச்சனையில் BSNL ஊழியர் சங்கத்தின் கருத்தினை தெரிவித்தார். 01.01.2027க்கு முன்பு தற்போது பணியில் உள்ள 80 சதவிகித ஊழியர்களும் அதிகாரிகளும் பணி ஓய்வு பெற்று விடுவார்கள் என்பதை சுட்டிக் காட்டி, அந்த ஊழியர்களுக்கு இந்த ஊதிய மாற்றம் தான் இறுதியான ஊதிய மாற்றமாக இருக்கும். எனவே, இவர்கள் இந்த ஊதிய மாற்றத்தை பெறவில்லை என்றால் அவர்கள் தங்களின் ஓய்வூதியத்தில் பெரிய இழப்பை சந்திப்பார்கள். அவர்களின் இறுதி நாள் வரை இந்த இழப்பு இருக்கும் என்பதை பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு சுட்டிக் காட்டினார். இறுதியில் 01.01.2017 முதல் BSNL நிர்வாகம் ஊழியர்களுக்கான ஊதிய மாற்றத்தை அமுல்படுத்த வேண்டும் என உறுதியாக தெரிவித்தார். அந்தக் கூட்டத்தில் இறுதியாக உரையாற்றிய CMD BSNL திரு அனுபம் ஸ்ரீவ்ஸ்தவா, நமது பொது செயலாளரின் வாதத்தினை ஏற்று, ”3ஆவது ஊதிய மாற்றத்தை நாம் வெற்றிகரமாக்குவோம்” என தெரிவித்தார். CMD யின் இந்த பேச்சினை மிகுந்த கைத்தட்டலுடன் அவை வரவேற்றது. CMD BSNLன் இந்த அறிவிப்பை BSNL ஊழியர் சங்கம் மனதார வரவேற்கிறது.

**இலவச ரோமிங் திட்டம் மேலும் ஒருவருடம் நீட்டிப்பு:-** BSNLன் இலவச ரோமிங் திட்டத்தை மேலும் ஒரு வருடம் நீட்டிக்க BSNL முடிவு செய்துள்ளது. கடந்த ஆண்டு BSNL அறிவித்த இந்த திட்டம் மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் தனது வாடிக்கையாளர் தளத்தை BSNLஆல் மிகப்பெரிய அளவில் விஸ்தரிக்க முடிந்துள்ளது. இது நாள் வரை எந்த ஒரு தனியார் நிறுவனமும் இந்த திட்டத்தை அறிமுகப்படுத்த இயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சூழ்நிலையில் இந்த திட்டத்தை மேலும் ஒரு ஆண்டு காலம் நீட்டித்து இருப்பது வரவேற்கத்தக்கது.

**இந்திய தொலைதொடர்பு தொழிலில், BSNL ஒரு முக்கிய போட்டியாளர்:-** மொபைல் சேவையில் மிக வேகமாக வளர்ந்து வரும் நிறுவனமாக BSNL மாறியுள்ளது, மிக பெருமை தரும் விஷயமாகும். TRAI வெளியிட்டுள்ள அறிக்கையின் படி பிப்ரவரி மாதம் BSNLன் வளர்ச்சி விகிதம் 1.67%ஆகும். ஆனால் ஏர்டெல் நிறுவனம் 1.18%, வொடோபோன் 1.04% ஐடியா செல்லுலார் 0.85% வளர்ச்சி மட்டுமே கண்டன. ஒட்டு மொத்த தொலை தொடர்பு நிறுவனங்களின் வளர்ச்சி 0.85%ஆகவே இருந்தது. மார்ச் மாதத்தில் தொழிலில் வளர்ச்சி விகிதம் 0.68%ஆக இருக்கும் போது BSNLன் வளர்ச்சி 1.79%ஆக உயர்ந்துள்ளது. ஒரு காலத்தில் BSNL மூழ்கும் கப்பலைப் போல் இருந்தது. BSNLஐ தனியார் மயமாக்க வேண்டும் என்று கூட தனியார் நிறுவனங்கள் கோரிக்கை வைத்தன. ஆனால் நிர்வாகம், FORUM ஆகியவற்றின் கூட்டு முயற்சியின் காரணமாக இந்திய தொலை தொடர்பு தொழிலில் ஒரு பலமான போட்டியாளராக தற்போது BSNL மாறியுள்ளது.

**ஜாம்ஷெட்பூரில் நடைபெறும் காட்டாட்சியினை எதிர்த்து…:-** ஜாம்ஷெட்பூர் மாவட்ட பொது மேலாளராக இருந்த ஊழல் பேர்வழி B.N.சிங், கடந்த மூன்று ஆண்டுகளாக அங்குள்ள BSNL ஊழியர் சங்கத்தை சார்ந்தவர்களை தொடர்ந்து பழி வாங்கி வந்தார். BSNL ஊழியர் சங்கத்தின் ஜாம்ஷெட்பூர் மாவட்ட செயலாளர் தோழர் நரேஷ் ப்ராசாத் அவர்களை பொய்யான குற்றச்சாற்றை கூறி கட்டாய ஓய்வு தண்டனையை வழங்கினார். அகில இந்திய சங்கம் இந்த பிரச்சனையை கார்ப்பரேட் அலுவலகத்தில் எடுத்த காரணத்தால் அந்த தண்டனை ரத்து செய்யப்பட்டது. மீண்டும் ஜாம்ஷெட்பூர் பொது மேலாளர் நமது மாவட்ட செயலாளரை

தும்கா மாவட்டத்திற்கு கட்டாய இடமாற்றல் செய்ததோடு, BSNL ஊழியர் சங்கத்தின் முன்னணி தோழர்கள் மீது பொய்யான குற்றங்களை சுமத்தி குற்றப்பத்திரிக்கைகளை வழங்கி கடுமையான தண்டனைகளை வழங்கினார். நமது மத்திய சங்கம் தொடர்ச்சியாக CMD BSNL மற்றும் DIRECTOR(HR) ஆகியோரோடு தொடர்ச்சியாக விவாதித்த பின்னரும் பிரச்சனை தீரவில்லை.

எனவே கார்ப்பரேட் அலுவலகம் முன்பு 12.07.2016 முதல் தொடர் உண்ணாவிரதம் மேற்கொள்வது என மத்திய சங்கம் முடிவெடுத்து அதற்கான அறிவிப்பை நிர்வாகத்திற்கு வழங்கியது. நமது அறிவிப்பை கண்ட பின்னர் கார்ப்பரேட் அலுவலகம் ஜாம்ஷெட்பூர் பொது மேலாளர் B.N.சிங்கை பீகார் மாநிலம் கயா மாவட்டத்திற்கு மாற்றல் செய்துள்ளது. இது BSNL ஊழியர் சங்கத்திற்கு கிடைத்த வெற்றி. ஆனாலும் அங்குள்ள ஊழியர்கள் அனைவரின் பழி வாங்குதல் நடவடிக்கைகள் தீரும் வரை நமது போராட்டம் தொடரும் என நமது மத்திய சங்கம் அறிவித்துள்ளது. நியாயமான போராட்டம் கண்டிப்பாக வெற்றி பெறும் என நிரூபித்த மத்திய சங்கத்தினை தமிழ் மாநில சங்கம் மனதார வாழ்த்துகிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**